செ.வெ.எண் : 46/ ஜூன் நாள் : 23.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## மின்னணு குடும்ப அட்டைகள் தொடர்பான பல்வேறு சேவைகளை அரசு பொது இ-சேவை மையங்களிலேயே மேற்கொள்ளலாம்.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் அரசு பொது இ-சேவை மையத்தில் இன்று (23.06.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கினார்.

அதன்பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசு, பொதுமக்கள் பயன்படுத்தி வரும் குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக புதிய மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கிட உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் உணவு வழங்குதல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மூலம் பொதுமக்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மின்னணு குடும்ப அட்டைகள் தொடர்பான பல்வேறு சேவைகளை பொது இ-சேவை மையங்களில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முன்னதாக பெறப்பட்ட ஸ்மார்ட் கார்டு தொலைந்து போயிருந்தாலோ, சேதமடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் இருந்தாலோ பொதுமக்கள் தங்கள் அருகாமையில் உள்ள பொது இ-சேவை மையங்களை அணுகி ரூ.30/- கட்டணம் செலுத்தி புதிய ஸ்மார்ட் கார்டு பெற்று கொள்ளலாம். இதற்கு பழைய குடும்ப அட்டையில் பதிவு செய்துள்ள கைபேசி எண்ணை தெரிவிக்க வேண்டும். அந்த எண்ணுக்கு ஒரு முறை பயன்படுத்தக் கூடிய கடவுச்சொல் (One Time Password) அனுப்பப்படும். அந்த கடவுச்சொல்லைப் பயன்படுத்தி புதிய ஸ்மார்ட் கார்டு வழங்கப்படும்.

மேலும் பொதுமக்கள் ஸ்மார்ட் கார்டில் குடும்ப உறுப்பினர்களின் பெயரை நீக்குதல், குடும்ப அட்டையின் வகையினை மாற்றம் செய்தல், சிலிண்டர்களின் விபரத்தினை மாற்றம் செய்தல், குடும்ப தலைவர் பெயரை மாற்றம் செய்தல், முகவரி மாற்றம் செய்தல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்காக பொது இ-சேவை மையங்களை அணுகி ரூ.60/- செலுத்தி விண்ணப்பித்து பயன்பெறலாம்.

இவ்வாறு பெறும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர் ஒப்புதல் அளித்த பிறகு விண்ணப்பதாரரின் பதிவு செய்த கைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும். குறுஞ்செய்தி கிடைக்கப்பெற்ற பிறகு அருகிலுள்ள தமிழ்நாடு அரசின் கேபிள் டிவி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் இ-சேவை மையத்தை அணுகி திருத்தப்பட்ட மின்னணு ரேஷன் கார்டுகளை பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மு.மதியழகன், இராமநாதபுரம் வருவாய் வட்டாட்சியர் திரு.நா.சண்முகசுந்தரம், தனி வட்டாட்சியர் திருமதி.சாந்தி, வட்டாட்சியர் திரு.செய்யது முகமது உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**